# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 132/2014 | Date : 30.09.2021 | PW2 |
|---|---|---|
| Name: வீரராஜ் | த.பெ. அப்பு | |
| Evidence Recorded Time: 12.05 P.M. to 12.45 P.M | | |

**8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் 1ம் வாதி என் தகப்பனார். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் சமயம் என் அப்பா இறந்து விட்டார். வழக்கில் மற்ற வாதிகள் என் பெரியப்பாவின் வாரிசுகள். என் அப்பா இறந்த உடன் நாங்களாக தான் இந்த வழக்கில் எங்களை கட்சி சேர்க்க வேண்டும் மனு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். பெரியப்பாவின் வாரிசுகளும் அவர்களையும் கட்சி சேர்க்க மனு செய்துள்ளனர். நான் சொல்வது போல என் பெரியப்பாவின் வாரிசுகள் அவர்களை கட்சி சேர்க்க எந்த மனுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா ஏற்கனவே இந்த வழக்கில் முதல் சாட்சி ஆக விசாரணை செய்யப்பட்டு உள்ளார். அவரை குறுக்கு விசாரணை செய்யும் முன்பே இறந்து விட்டார். அவர் இறந்து விட்டதால் அவர் மூலமாக தாக்கல் செய்த ஆவணங்களை நீக்கி விட்டு என் மூலமாக தாக்கல் செய்ய எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாண்டாவன் என்பது என்னுடைய தாத்தா மற்றும் அமராவதி என்னுடைய பாட்டி ஆவார். தாவாவில் கண்ட சொத்துக்ள் அமராவதியின் சொத்துக்கள் தான் என்றால் அவருக்கு ஜீவனாம்சம் ஆக வந்த சொத்துக்கள் ஆகும். வழக்கில் குறிப்பிட்ட சொத்துக்கள் தவிர மற்ற குடும்ப பொது சொத்துக்கள் இருக்கிறது என்றால் அவ்வாறு இல்லை. 4ம் பிரதிவாதி கோசலை என்பவர் மேட்டுர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.எண்.219/2013 என்ற வழக்கை தாக்கல் செய்து உள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் பொது குடும்ப சொத்து என்று தான் நான் வழக்காடி வருகிறேன் என்றால் சரிதான். அதே 4ம் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.240/2013 என்ற வழக்கை தாக்கல் செய்து அது நிலுவையில் இருக்கிறது என்றால் சரிதான். அந்த இரண்டு வழக்குகளிலும் பிரதிவாதிகள் நல்லத்தம்பி, சசிகுமார் ,பொன்னுசாமி ஆகியோர்கள் தரப்பினர்கள் என்றால் சரிதான். அவர்களுக்கும் எங்கள் குடும்பத்துக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. இந்த வழக்கில் உள்ள 1 முதல் 3 பிரதிவாதிகள் இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.163/2014 என்ற வழக்கு தாக்கல் செய்து உள்ளார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் என்ன சொத்து விவரங்கள் காட்டப்பட்டு உள்ளதோ அதே சொத்து விவரங்கள் அ.வ.எண். 163/2014 என்ற வழக்கிலும் காட்டப்பட்டு உள்ளது என்றால் சரிதான். இந்த இரண்டு வழக்குகளையும் ஒரே சேர நடத்த நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால்

அவர்கள் வேறு குடும்பம் அதனால் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த வழக்கில் உள்ள சொத்து 10.08.2001ல் என்னுடைய பாட்டி அமராவதி 4ம் பிரதிவாதி கோசலைக்கு உயில் பத்திரம் எழுதி கொடுத்து உள்ளார் என்றால் அந்த உயில் பத்திரம் மோசடியாக எழுதப்பட்டதாகும் அது செல்லாது. என்னுடைய பாட்டி 01.09.2002 ல் இறந்து விட்டார் என்றால் சரிதான். அவர் இறந்து பிறகு 2003ம் ஆண்டு கோசலையின் பேரில் பட்டா மாறி விட்டது என்றால் சரியல்ல மாறவில்லை. பாட்டி எழுதிய உயிலில் உள்ள சொத்தின் நான்கு பக்க சக்குபந்தி தெரியுமா என்றால் தெரியுமா என்றால் தெரியாது. நல்லத்தம்பி வகையாறக்கள் கிரையம் வாங்கிய சொத்தின் சக்குபந்தி எல்லையும் என் பாட்டி எழுதிய உயியின் சக்குபந்தி எல்லையும் ஒன்று தான் என்றால் அது தெரியாது. என் அப்பா 2002ம் ஆண்டு காலக்கட்டத்தில் கொளத்தூரில் கிராம உதவியாளராக இருந்தார் என்றால் ஒலைப்பட்டி கிராமத்தில் கிராம உதவியாளராக இருந்தார். எத்தனை வருடமாக ஒலைப்பட்டியில் கிராம உதவியாளராக இருந்தார் என்றால் அதன் பிறகு கொளத்தூருக்கு வந்து விட்டார். என் அப்பாவிற்கு கோசலை பெயரில் உயில் மூலமாக கிடைத்த சொத்தின் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என் அப்பாவிற்கு தெரியும் என்றால் சரியல்ல என் அப்பா மீது அவர்கள் வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் தெரியும். என் அப்பா ஒய்வு பெற்ற பின்பு கொளத்தூர் கிராம நிர்வாக அலுவலகத்துக்கு உதவி செய்வதற்கு செல்வார் என்றால் சரியல்ல. பெரியதண்டா கிராமத்துக்கு தான் உதவி செய்வதற்கு செல்வார். நான் சொல்வது தவறு என்றாலும் மேட்டுர் வட்டாரத்தில் பெரியதண்டா என்ற கிராமம் வருவது இல்லை என்றாலும் லக்கம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள ஒரு சிறு கிராமம் தான் பெரியதண்டா கிராமம் என்றால் சரிதான். 13.07.2011ம் ஆண்டு நல்லத்தம்பி வகையாக்கள் கிரையம் வாங்கிய விவரம் பட்டா அவர்கள் பெயரிலும் பட்டா அவர்கள் பெயரில் மாற்றம் செய்யப்பட்ட விவரமும் எங்கள் அப்பாவிற்கும் எங்கள் குடும்பத்துக்கும் நன்றாக தெரியும் என்றால் சரியல்ல. 2011ம் ஆண்டு என் அப்பா மற்றும் பெரியப்பா ஆகியோர்கள் குடும்பத்துக்கு தலா ரூ.1 லட்சம் வீதம் கோசலையிடம் இருந்து பெற்றுக் கொண்டோம் என்றால் சரியல்ல. கிரையம் ஆன விவரம் பட்டா மாறிய விவரம் 2014ம் ஆண்டில் எங்களுக்கு தெரியும் பொய்யாக சொல்லி உள்ளோம் என்றாலும் 2011ம் ஆண்டே எங்களுக்கு தெரியும் என்றாலும் சரியல்ல. நான் கோசலை அம்மாவிடம் தனிப்பட்ட விரோதம் காரணம் ஆக பழிவாங்கும் நோக்கத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளிர்கள் என்றால் சரியல்ல. கோசலை தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.219/2013 வழக்கிற்கு பின்பு தான் இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளோம் என்றால் சரிதான். உண்மையில் எங்களுக்கு சொத்தில் பாகப்பிரிவினை கேட்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் அனைத்து சொத்துக்களையும் பாகப்பிரிவினையில் சேர்த்து இருப்பேன் என்றால் இந்த வழக்கு சொத்து மட்டும் தான் பொது சொத்து ஆகும் மற்ற சொத்துக்கள் தனிபட்டா வந்து விட்டது. தனிபட்டா வந்தது தொடர்பாக ஏதேனும் பாகபிரிவினை பத்திரம்

உள்ளதா என்று கேட்டால் அது பற்றி தெரியாது. மேற்படி பட்டா ஆன சொத்துக்கள் மூதாதையர் சொத்துக்கள் என்றால் இல்லை என் பெரியப்பா மாதன் பெயரில் உள்ள சொத்துக்கள் ஆகும் .நான் நல்லதம்பி வகையாறவிடம் துர்லாபம் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. இந்த நல்லதம்பி வகையாறக்கள் கிரையம் வாங்கும் சமயம் கோசலை பெயரில் இருந்த பட்டா மற்றும் சக்குபந்தி பார்த்து தான் கிரையம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல வில்லங்கம் இருப்பதை தெரிந்து கொண்டே குறைவான தொகை கொடுத்து சொத்தை விலைக்கு வாங்கி உள்ளார்கள். நல்லதம்பி வகையாறக்கள் முறையாக உண்மையான உரிமையாளரிடம் இருந்து தான் சொத்தை கிரையம் வாங்கி உள்ளார்கள் என்றாலும் அதை ரத்து செய்ய எனக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல சொத்தின் வாரிசுதாரர்கள் அனைவரிடமும் கேட்காமல் கிரையம் கொடுத்து உள்ளதால் அது செல்லாது. அதனால் இந்த வழக்கை அப்பு வின் வாரிசு என்ற முறையில் தரப்பினர்களாக சேரவில்லை என்றும் மூன்றாம் தரப்பினராக தான் சேர்ந்து உள்ளீர்கள் என்பதால் வழக்கு பரிகாரத்தை நான் கேட்க முடியாது என்றால் சரியல்ல. என் அப்பாவின் சட்டப்படியான வாரிசுகள் என்ற முறையில் நாங்கள் கட்சி சேரவில்லை என்பதால் அப்பு கேட்ட வழக்கு பரிகாரங்கள் செயலற்று போய் விட்டது என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா கேட்ட பரிகாரமே செயலற்று போய் விட்டதால் நாங்கள் எந்த ஒரு பரிகாரமும் கேட்க முடியாத நிலையில் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று என்றால் சரியல்ல.

ஒம்/-PW2

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/−S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டுர்.